58758

# அதிராம்பட்டினம்
# ஸ்ரீ அபயவரதேஸ்வரர் சுவாமி
# கோயில் வரலாறு

Q23:38.21193
N56
58758

அதிராம்பட்டினம்

# ஸ்ரீ அபயவரதேஸ்வர சுவாமி

## கோயில் வரலாறு

421. / 1-56



OFFICE OF THE REGISTRAR OF BOOKS
9 - FEB 1956
MADRAS

கோயிலும், முன் வாயிலும்

தேவஸ்தான வெளியீடு

1956

Q23:38·21193.08
N56
58258

உ

அதிராம்பட்டினம்

# ஸ்ரீ அபயவரதேஸ்வர சுவாமி கோயில் வரலாறு


திருச்சிராப்பள்ளி ஓய்வுபெற்ற தமிழ் ஆசிரியரும்,
அறநிலையப் பாதுகாப்பு இலாகாவின் (H. R. & C. E.)
ஆதரவில் பல கோயில் வரலாறுகளை எழுதியவரும் ஆகிய

**திரு. R. பஞ்சநதம் பிள்ளை அவர்களால்**

எழுதப்பெற்று



FEB 1956
MADRAS



மேற்படி தேவஸ்தானம்

**திரு. T. S. K. சோமசுந்தரத் தேவர் அவர்கள்**

மானேஜிங் டிரஸ்டி

**திரு. சுந்தரேச தேவர் அவர்கள்**
**திரு. கணபதி தேவர் அவர்கள்** } டிரஸ்டிகள்

நிர்வாக அதிகாரி

**திரு. P. துளஜேந்திர ராஜா பான்ஸ்லே அவர்கள்**

ஆகியோரால் வெளியிடப் பெற்றது.

**தேவஸ்தான வெளியீடு**

**1956**



உரிமை செய்யப்பெற்றது ]


[ விலை 4 அணா.

58258

Q23:38.21193.A8
N56

# முன்னுரை

தெய்வ உணர்ச்சியை உண்டாக்கும் சிறப்பிடங்களாக ஆன்றோர்கள் அமைத்த ஆலயங்கள் விளங்குகின்றன. ஆலயங்களுக்குச் சென்று வழிபடுதல் மிகவும் நல்லது. அவைகளுள் தஞ்சாவூர் ஜில்லா — பட்டுக்கோட்டை தாலூகாவில், பட்டுக்கோட்டைக்குத் தென்கிழக்கில் 7 மைல் தூரத்திலுள்ள அதிராம்பட்டினம் என்னும் கடற்கரைப்பதியில் ஸ்ரீ அபயவரதேஸ்வர சுவாமி கோயில் உள்ளது. அதிவீரராமபாண்டியனால் அமைக்கப் பெற்றதால் அதிவீரராமன் பட்டினம் என்று பெயராகித் தற்போது அதிராம்பட்டினம் என வழங்குகிறது. கோயிலுக்கு வருவோர் கோயிலின் பெருமைகளையும் ஊரின் சிறப்புக்களையும் அறிந்துகொள்வது நலம். சென்னை அறநிலையப் பாதுகாப்பு இலாகா, (Hindu Religious and Charitable Endowments) அனுப்பிய சுற்றறிக்கையின்படி இவ்வரலாறு சுருக்கமாய் எழுதப்பெற்று, H. R. & C. E. உதவி ஆணையாளர் அவர்களால் பார்வையிடப்பெற்றது.

பழங்காலச் சின்னங்களாகிய கோயிற் சிற்பங்களைப் பாதுகாப்பதிலும், கோயில் வரலாறுகளை வெளியிடச் செய்வதிலும், தற்போதுள்ள அறநிலையப் பாதுகாப்புத் தலைவர்கள் வேண்டுவன செய்து வருகிறார்கள். இதில் கோயில் விளக்கமும், தலப்பெருமைகளும், துதிப்பாடல்களும் சேர்க்கப்பெற்றுள்ளன. அன்பர்கள் படித்து ஸ்ரீ அபயவரதப் பெருமானது அருளைப் பெறுவார்களாக.

திருச்சிராப்பள்ளி<br>மலைக்கோட்டை<br>10—12—55

**R. பஞ்சநதம் பிள்ளை,**<br>தமிழ் ஆசிரியர்.


## உள்ளடக்கம்


| | | | பக்கம் |
|---|---|---|---|
| 1. | கோயில்களும். குறிகளும் | ... | 5 |
| 2. | கோயிலும், இருப்பிடமும் | ... | 7 |
| 3. | கோயிலின் அமைப்பு | ... | 10 |
| 4. | கோயிலின் படம் | ... | 12 |
| 5. | மூர்த்திகளின் பெயர்கள் | ... | 13 |
| 6. | தலப் பெருமைகள் | ... | 13 |
| 7. | திருப்பணிகள் | ... | 15 |
| 8. | தினப் பூஜையும், விழாக்களும் | ... | 16 |
| 9. | வருமானமும், சொத்துக்களும் | ... | 18 |
| 10. | நிர்வாகம் | ... | 19 |
| 11. | கல் வெட்டுக்கள் | ... | 19 |
| 12. | வரலாறுகள் | ... | 20 |
| 13. | துதிப்பாடல்கள் | ... | 22 |


## கோயில் விளக்கம்

**கோயில்**—ஸ்ரீ அபயவரதேஸ்வர சுவாமி கோயில்
**இடம்**—அதிராம்பட்டினம் (அதிவீரராமன்பட்டினம்)
**மூலவர்**—ஸ்ரீ அபயவரதேஸ்வரர்
**அம்மன்**—சுந்தரநாயகி
**தீர்த்தம்**—திருக்குளம்
**மரம்**—வன்னி மரம்.

தஞ்சாவூர் ஜில்லா — பட்டுக்கோட்டை தாலுகாவில் பட்டுக்கோட்டைக்குத் தென் கிழக்கில் 7 மைல் தூரத்திலுள்ள அதிராம்பட்டினத்தில் உள்ளது.



மாணிக்கவாசகர் நடராஜர் சிவகாமசுந்தரி

# அதிராம்பட்டினம் ஸ்ரீ அபயவரதேஸ்வர சுவாமி கோயில் வரலாறு

## 1. கோயில்களும், குறிகளும்

நமது முன்னோர்களின் நாகரிக வாழ்வுக்கு எடுத்துக்காட்டாக விளங்குவன, முன்னோர்கள் எடுப்பித்த திருக்கோயில்களாகும். அவைகள் பக்தியை உண்டாக்கும் இடங்களாவதன்றிப் பலவகைச் சிற்பங்கள் நிறைந்த சேமிப்புக்கள் ஆகும். மேலும் மின்சார அணுக்கள் நிறைந்துள்ள இடம் (Power House) போலத் தெய்வீகத் திருவருள் அணுக்கள் செறிந்துள்ள சிறப்பிடங்களாகும். எழுத்தின் ஒலி வடிவை உணர்த்துதற்கு வரிவடிவெழுத்து அமைந்தது போலக் கட்புலனால் காணமுடியாத கடவுளை வணங்குவதற்குக் கோயில்கள், கடவுளைக் காட்டும் சாதனங்களாக விளங்குகின்றன. இவைகளை நம் முன்னோர்கள் தம் உயிரினும் மேலாகப் பாதுகாத்துப் பின் வழியினராகிய நமக்கு அருஞ்செல்வங்களாக வைத்துச் சென்றார்கள். நாட்டின் நலத்துக்கும், மக்களின் நல்வாழ்வுக்கும் கோயில்கள் இன்றியமையாதன. வாழ்க்கைக் கடலில் அகப்பட்டுத் துன்புறும் மக்களுக்குக்

கோயில்கள் கலங்கரை விளக்கங்களாக (Light House) விளங்குகின்றன. வானளாவிய கோபுரங் களும், விமானங்களும், மதில்களும், தூரத்திலிருந்து பார்ப்பவர்களுக்குப் பக்தியை உண்டாக்கும் வகையில் அமைந்துள்ளன. "கோயில் விளங்கக் குடிவிளங்கும்," ஆலயந்தொழுவது சாலவும் நன்று" என்பவை ஆன்றோர் கூறிய அனுபவமொழிகளாகும்.

எல்லாவற்றையும் கடந்த பரம்பொருளாகிய இறைவன், உலகத்திலுள்ள பல உயிர்களும் துன்பம் நீங்கி இன்பம்பெற்று உய்யும் வண்ணம் தன் கடந்த நிலையான அருவ நிலையிலிருந்து இறங்கி, இப் பூவுலகத்தில் ஆங்காங்குள்ள பல தலங்களில் உருவத் திருமேனிகொண்டு எழுந்தருளியிருந்து, பக்தியுடன் வழிபடும் அடியார்களுக்கு அருள்செய்து வருகிறான். அத்தகைய சிறப்பிடங்களே ஆலயங்கள் ஆகும். பசு வின் உடல் முழுதும் பால் மறைந்திருந்தபோதிலும், மடியின் மூலமாகவே பால் வெளிப்படுவது போலவும், சூரியன் எங்கும் பரவியிருந்தபோதிலும், பளிங்குக் கல்லின் மூலமே கிரணங்கள் வெளிப்படுவது போலவும், ("பளிங்கின் நிழலுட்பதித்த சோதி யானை"—அப்பர்) நிலத்துக்கடியில் நீர் இருந்த போதிலும், தோண்டிய இடத்தில்தானே நீர்தோன்று வதுபோலவும், இறைவன் எங்கும் வியாபித்திருந்த போதிலும் பெரியோர்கள் அமைத்த ஆலயங்களில் உள்ள மூர்த்திகளின் மூலமாகவே இறைவன் வெளிப் பட்டு அன்பர்களுக்கு அருள்செய்வான்.



"இருஞ்சுரபிக்கெங்கும் உருக்காண ஒண்ணாத
பால் முலைப்பால் விம்மி ஒழுகுவதுபோல
வெளிப்பட்டருள்வன் அன்பர்க்கே"
— சிவஞான சித்தியார்.

"எங்கும் சிவனிருப்பன் ஆனாலும் ஏசற்ற
சங்கமத்தும் சற்குருவின் தன்னிடத்தும்—லிங்கத்தும்
ஆவினுடம் பெல்லாமும் ஆவரித்து நிற்கினும்பால்
பாவுமுலைக் கண்மிகுதிப்பார்"
— சிவஞானப்பிரகாச வெண்பா.

இவ்வாறு புறத்தே கோயில் கொண்டு விளங்கும் இறைவன், பக்தியுடன் வழிபடும் அடியார்களின் உள்ளத்தையும் கோயிலாகக் கொண்டு அருள் செய் கின்றான். ஆதலின் பெறுதற்கருமையான மனிதப் பிறவியைப் பெற்றவர் அனைவரும் கோயில்களில் குடிகொண்ட பசுபதியாகிய பரமனை அன்பினால் வழி பட்டு, அவன் வகுத்த நன்னெறியில் சென்று அவ னருளைப்பெற முயலுதல் சிறந்த கடமையாகும். "மானுடப் பிறவிதான் வகுத்தது மனவாக்காயத்து ஆனிடத்தைந்தும் ஆடும் அரன் பணிக்காக அன்றோ" என்று ஆன்றோரும் கூறியுள்ளார்.

## 2. கோயிலும், இருப்பிடமும்

தென்னாடாகிய தமிழ் நாட்டில் பெருமான் உறை யும் கோயில்கள் பல உள்ளன. அவை சிவன் கோயில் கள், முருகன் கோயில்கள், திருமால் கோயில்கள் முதலியன. இவைகளில் அந்தந்த சமயத் தலைவர் களால் தேவாரப் பதிகம் பாடப்பெற்ற தலங்களும், பெயர்மட்டும் குறிக்கப்பெற்ற வைப்புத்தலங்களும், தல புராணங்களைக் கொண்ட கோயில்களும், புலவர்

களால் தனிப் பாடல் பெற்ற தலங்களும், பிற்காலத்தில் பக்தர்களால் அமைக்கப்பெற்ற அபிமானத் தலங்களும் அடங்கியுள்ளன.

இவைகளில் அதிவீரராம பாண்டியன் என்னும் பாண்டிய மன்னனுல் அமைக்கப்பெற்ற அதிராம் பட்டினம் என்னும் ஊரில் அமைந்தது, ஸ்ரீ அபய வரதேஸ்வர சுவாமிகோயில் என்னும் தலமாகும். இது அபிமானத்தலங்களுள் ஒன்ருக உள்ளது.

எப்போதும் வற்ருத நீர்ப்பெருக்கையுடைய வான் பொய்ப்பினும் தான் பொய்யாத பெருமையுடைய காவிரி நதி பாயும் நாடு சோழ நாடு. ஒப்பில்லாத இறைவன் ஒருவனே பல வடிவங்களையும், பல பெயர்களையும் பெற்று விளங்குவதுபோல், காவிரி நதியும், ஆறு, கால்வாய், ஓடை, ஏரி, குளம் முதலிய பல பெயர்களைப்பெற்று ஆங்காங்கு வளப்படுத்துகிறது. இத்தகைய காவிரி நதி பாய்வதால் சோழ நாட்டிற்கு, வளவநாடு, சென்னி நாடு, அபய நாடு, கிள்ளி நாடு, செம்பியர் நாடு, அகளங்க நாடு, பெருநீர் நாடு, பொன்னி நாடு முதலிய பெயர்கள் வழங்கும். இந் நாட்டின் பெருமையை மகா வித்வான் மீனுட்சி சுந்தரம் பிள்ளை அவர்கள் பின்வருமாறு காட்டுகிருர்.

*"பூவினுள் பதுமம்போலும் புருடருள் திருமால்போலும்*
*காவினுள் கற்பம்போலும் கலைகளுள் ஞானம்போலும்*
*ஆவினுள் சுரரான்போலும் அறத்துள் இல்லறமே போலும்*
*நாவினுள் மெய்ந்நாப்போலும் நாட்டினுள் சோழநாடு'*

"சோழநாடு சோறுடைத்து — நெல்லுடையான் நீர் நாடர்கோ" என்னும் பழமொழிகளும் இந்நாட்டின் சிறப்பை அறிவிக்கும்.



இத்தகைய பெருமைகளையுடைய சோழ நாட்டில் தென்னுட்டு நெற்களஞ்சியம் எனப்படும் தஞ்சாவூர் ஜில்லா, பட்டுக்கோட்டை தாலூகாவில், அதிராம் பட்டினம் என்னும் கடற்கரைப் பதியில் ஸ்ரீ அபய வரதேஸ்வர சுவாமி கோயில் உள்ளது. அதிவீர ராமன் பட்டினம் என்பது அதிராம் பட்டினம் என மருவி வழங்குகிறது. அதிரை என்றும் சொல்லப் படும். திருவாரூர்—காரைக்குடி புகைவண்டி மார்க்கத்தில் அதிராம்பட்டினம் ரயில்நிலையத்திலிருந்து வடக்கே அரை மைலில் கோயில் உள்ளது. தஞ்சை-அதிராம்பட்டினம் மோட்டார் வண்டிப்பாதையில் தஞ்சையிலிருந்து 40 மைல் தூரத்திலும், மன்னுர் குடி—அதிராம்பட்டினம் பஸ் மார்க்கத்தில் 25 மைல் தூரத்திலும், புதுக்கோட்டை — அதிராம் பட்டினம் மோட்டார் மார்க்கத்தில் 50 மைல் தூரத்திலும் இவ் வூர் உள்ளது. ரயில் மார்க்கமாகவும், மோட்டார் வண்டி மார்க்கமாகவும் இவ்வூரை அடையலாம். இவ் வூரில் தபால் தந்தி நிலையமும், போலீஸ் ஸ்டேஷனும் பத்திரங்கள் பதிவு செய்யும் சப்-ரிஜிஸ்டிரார் ஆபீசும், உப்பு ஆபீசும், சுங்க நிலையமும், சர்க்கார் மீன் நிலையமும், மேட்டூர் கெமிக்கல்ஸ் கிளை நிலையமும், ஜில்லா போர்டைச் சேர்ந்த ஆஸ்பத்திரியும் உள்ளன. ஜில்லா போர்டைச் சேர்ந்த மூன்று தொடக்கநிலைப் பள்ளிகளும், காதர் மொகிதீன் உயர்நிலைப் பள்ளியும் இருக்கின்றன. மேலும் இவ்வூரில் காதர் மொகிதீன் கல்லூரி (Khadir Mohideen College) என்னும் கல்வி நிலையம் புதிதாகத் தொடங்கப்பெற்று, 5—7—55-ல் சென்னை கல்வி மந்திரி அவர்களால் திறக்கப்பெற்று, அதில் பல இனத்து மாணவர்களும் கல்வி பயின்று

வருகின்றனர், ரயில் நிலையத்தை அடுத்துக் கடற்கரைக்குப் போகும் வழியில் ஓர் தூண் விளக்கு (Light House) உள்ளது; கடற்கரையில் இரண்டு உப்பளங்கள் உள்ளன. இங்கிருந்து வெளியிடங்களுக்கு உப்பு அனுப்பப்படுகிறது. இவ்வூரில் முகம்மதியர்களுக்குரிய பெரிய தர்க்கா (பள்ளிவாசல்) உள்ளது. விழாக்காலங்களில் வெளியூர்களிலிருந்து கூட்டம் மிகுதியாக வரும். இவ்வூரில் பஞ்சாயத்து ஆட்சி நடைபெறுகிறது. ஜனத்தொகை சுமார் இருபதாயிரம். பெரும்பாலோர் முகம்மதியரும், பிற வகுப்பினரும் உள்ளனர். ஊரில் குடி தண்ணீர் வசதி குறைவு. மன்னப்பன் குளத்திலிருந்து பஞ்சாயத்து போர்டாரால் அமைக்கப்பட்ட யந்திரக் குழாய் மூலம் குடிதண்ணீர் வழங்கப்படுகிறது. குளிப்பதற்குப் பல குளங்கள் உள்ளன. ஊருக்கு ஒரு மைலுக்கப்பால் ஓர் காட்டாறு ஓடுகிறது. இவ்வூரில் மிகவும் பிரசித்திபெற்ற செல்லியம்மன் கோயில் இருக்கிறது. இந்தத் துர்க்கை அம்மன் ஊருக்குக் காவலாகச் சொல்லப்படுகிறது. ஆடி மாதத்தில் பூரநாளில் பெருந் திருவிழா நடத்தப்படுகிறது. இதனால் இவ்வூருக்கும் செல்லிமாநகர் எனப் பெயர் வழங்குகிறது. மேலும் இவ்வூரில் பிடாரியம்மன் கோயில், மாரியம்மன் கோயில், ஐயனார் கோயில் முதலிய கோயில்கள் இருக்கின்றன. சில உற்சவச் சிலைகள் கோயிலில் உள்ளன.

### 3. கோயிலின் அமைப்பு

சுற்றிலும் பரந்த வெளிக்கு நடுவில் கோயில் கிழக்கு நோக்கி அமைந்துள்ளது. கோயில் சிறியது. முன் வாயிலுக்குக் கோபுரமில்லை. உள்பிராகாரத்தில்




மேற்கில் விநாயகரும், சுப்பிரமணியரும், வன்னிமர விநாயகரும், கிழக்கில் மடைப்பள்ளியும், சாமான் அறையும், நவக்கிரகங்கள், சூரியன், பைரவர் மூர்த்திகளும் உள்ளன. மூலவர் சந்நிதி கிழக்கு நோக்கியும், அம்மன் சந்நிதி தெற்கு நோக்கியும் உள்ளன. உள் மண்டபத்தில் அதிகார நந்தி, நால்வர், சோமாஸ்கந்தர், சுப்பிரமணியர் முதலிய உற்சவச் சிலைகள் உள்ளன. விமானத்துடன் கூடிய பழனியாண்டவர் விக்கிரகமும், மந்திரத் தகடுகளும், மாயூரம் தாலூகா பழையனூர் அன்பர் மீனாட்சிசுந்தரம் பிள்ளை அவர்களால் கோயிலுக்குக் கொடுக்கப்பட்டன. பிடாரி, ஐயனார் முதலிய கிராம தேவதைகளின் உற்சவச் சிலைகளும் வைக்கப்பட்டுள்ளன. கோயிலுக்குப் பக்கத்தில் ஓர் ஏரி உள்ளது. கோயிலுக்கு வெளியே தேவஸ்தான அலுவலகம் (Office) புதிய கட்டிடத்தில் உள்ளது. கோயிலுக்குரிய மரம், வன்னிமரம். கோயிலின் அமைப்பைக் காட்டும் படம் தனியே இத்துடன் இணைக்கப்பட்டு உள்ளது.

கோயிலின் அமைப்பைப் பார்த்தால், இக்கோயிலின் மூர்த்திகள், ஆதியில் வேறிடத்தில் கோயில் கொண்டிருந்து, பிறகு இவ்விடத்தில் பிரதிட்டை செய்யப்பட்டதாகத் தெரிகிறது. ஊருக்குப் பக்கத்திலுள்ள பாழடைந்த கோட்டையில் விநாயகர் கோயில், சிவன் கோயில், பெருமாள் கோயில் முதலியவைகளின் சிதைந்த அடையாளங்கள் இருப்பதாகச் சொல்லப்படுகிறது.


58258
O23:39.2193
N56

## 4. கோயிலின் படம்




எண்களின் விளக்கம் :—

1. முன் வாயில்
2. நந்தி மண்டபம்
3. சாமான் அறை
4. மடைப்பள்ளி
5. விநாயகர்
6. சுப்பிரமணியர்
7. வன்னிமரம், விநாயகர்
8. பைரவர், நவக்கிரகம், [சூரியன்
9. உள் வாயில்
10. மூலவர் சந்நிதி
11. அம்மன் சந்நிதி
12. தெற்குவாயில்
13. தேவஸ்தான அலுவலகம் [Office
14. ஏரி






## 5. மூர்த்திகளின் பெயர்கள்

இத் தலத்துப் பெருமானுக்கு அபயவரதேஸ்வரர் என்னும் பெயர் வழங்குகிறது. அடைக்கலம் புகுந்தோர்க்கு வரங்கள் கொடுக்கும் பெருமான் என்பது பொருள். "ஆரேனுந்தன்னடைந்தார் தம்மையெல்லாம் ஆட்கொள்ள வல்ல ஈசர்" என்று அப்பர் கூறுகிறார். அம்மனுக்குச் சுந்தரநாயகி என்பது பெயர். அழகுடையவள் என்பதாகும். சுந்தர நாயகிபுரம் என்னும் கிராமமும் உள்ளது. விமான மண்டபத்துச் சுவரில் உள்ள கல்வெட்டில் சுவாமிக்கும், அம்மனுக்கும், உடையார், நாச்சியார் என்னும் பெயர்கள் காணப்படுகின்றன.

## 6. தலப் பெருமைகள்

குறிஞ்சி, முல்லை, மருதம், நெய்தல் என்னும் நால்வகை நிலங்களில், குறிஞ்சி என்பது மலைப் பகுதியும், முல்லை என்பது காட்டுப் பகுதியும், மருதம் என்பது வயல் பகுதியும், நெய்தல் என்பது கடற் பகுதியும் ஆகும். இவைகளில் அதிராம் பட்டினம் என்னும் இவ்வூர் நெய்தலும், மருதமும் சேர்ந்த பகுதியாகும். ஒரு பக்கம் கடற்கரையும், தாழை முதலிய செடிகளும், மற்றொரு பக்கத்தில் வயல் களும் சோலைகளும் சூழ்ந்துள்ளன. மிகப் பழமையான ஊர். அதிவீரராம பாண்டியன் என்னும் மன்னனால் உண்டாக்கப்பட்ட ஊர். அதிவீரராமன் பட்டினம் என்பது • அதிராம்பட்டினம் என மருவி வழங்குகிறது. செல்லியம்மன் என்னும் துர்க்கா

தேவி இவ்வூரில் பிரசித்தி பெற்று விளங்குகிறது. இதனுல் இவ்வூருக்கும் செல்லிமா நகர் என்ற பெயர் வழங்குகிறது. இந்த அம்மனும், சிவன் கோயிலில் உள்ள பிற மூர்த்திகளும் பாண்டியன் வழிபட்டு வந்த தெய்வங்களாகச் சொல்லப்படுகின்றன.

இவ்வூர் பெரிய வியாபாரத்தலம். உப்பு, தேங் காய் முதலிய பொருள்கள் வெளியிடங்களுக்கு அனுப்பப்படுகின்றன. மேலும் சரித்திரப் பிரசித்தி பெற்றது.

ஒரு காலத்தில் இவ்வூர் பெரிய துறைமுகப் பட்டினமாக இருந்ததாகவும், இங்கிருந்து இலங் கைக்கு அரிசி முதலியன ஏற்றுமதி செய்து வந்த தாகவும், வேறு பொருள்கள் அங்கிருந்து இறக்கு மதி செய்யப்பட்டதாகவும் தெரிய வருகிறது. கடற் கரையில் அழிந்து போன சில கட்டிடங்கள் காணப் படுகின்றன. இவ்வூரை யடுத்துள்ள ராஜாமடம் கடற்கரையில் 7 அடுக்குகளைக் கொண்ட 100 அடி உயரமுடைய **மனோரா** என்னும் தூண் உள்ளது. கிழக்கிந்தியக் கம்பெனியார் காலத்தில் ஆங்கிலேயர் அடைந்த வெற்றியின் சின்னமாகத் தஞ்சை அரசர் சரபோஜி மகா ராஜாவால் 1815-ல் அமைக்கப் பெற்றது,

"*Adirampatnam :—* 7 Miles south east of Pattukkottai in the north west corner of Palk's Bay, and at the western end of the great mud swamp that extends as far as Point Cale-



mere. The name is a contraction of Adivira-raman Patnam, the place having been founded by the Pandian King Adivirarama (1562—67). It is a union contains a railway station, Police station, and a local fund dispensary is an important seaport and trading town and has a population of 10494 of whom 5623 are Muhomodens. The trade is chiefly with Ceylon ......... The exports consisted almost entirely of rice and the imports mostly of treasure. A moderate quantity of grain and co-coanuts was also imported. There are a number of rich traders and ship owners in the place, mostly Muhomodens. The place contains the salt factory.

—(Tanjore District Gazatteer)

## 7. திருப்பணிகள்

முன்னோர்கள் ஏற்படுத்திய பல பெருமைகளை யுடைய கோயில்களுக்கு எவ்வித தீங்கும் நேராதபடி அவ்வப்போது ஆவன செய்து பாதுகாக்க வேண்டும். புதியதோர் ஆலயத்தை அமைப்பதைப் பார்க்கிலும் பழமையான கோயிலைப் புதுப்பித்தல் மிக்க புண்ணி யத்தைத் தரும் என்பர். "புதிதுறப்பணிகள் வேறு புரிவதின் பழய தொன்றை விதியுளி புதுக்கு வோர்க்கு மிக்க புண்ணியந்தான் எய்தும்" என்று கச்சியப்ப முனிவர் கூறுகிறார்

"மாதவர் மடங்களாதி வரதன் மந்திரங்களாதி
நாதமா லிலிங்கமாதி நளின புட்கரணியாதி
சேதமுற்றிடின் முன்பேர்ல் செய்பவர்க்குறுபலன் தான்
ஓதுமுன் செய்தோர் தம்மில் ஆயிரங்குணிதமோங்கும்"

ஆதியில் சுவாமி, அம்மன் சந்நிதிகள் தனித்தனியாய் இருந்தன. பிறகு தம்பிக்கோட்டை சித. ராம. ரெங்கசாமித் தேவர் அவர்கள், இக்கோயிலின் தர்ம கர்த்தாவாகத் தொண்டு செய்த போது, 1941-ல் முன் மண்டபம், மதில்கள், பல சந்நிதிகள் முதலிய திருப்பணிகளைச் செய்து கோயிலைப் புதுப்பித்து 2—4—1941-ல் கும்பாபிஷேகம் நடத்தி வைத்தார். இவைகளுக்குச் சுமார் பத்தாயிரம் ரூபாய் வரையில் செலவாயிற்று. இவர் காலத்தில் பல நிலங்கள் கோயிலுக்குச் சேர்ந்தன. இவர் வேறு பல கோயில் களையும் புதுப்பித்துத் திருப்பணி செய்ததாகத் தெரிகிறது. "எம்பெருமான் கோயில்கள் எண்ணிரண்டினையும் புதுப்பித்து எம்மனோர் தமக்கு உய்வழி திறந்த உத்தம" என்று போற்றப்பட்டுள்ளார்.

மேலும் முன்கோபுரம் முதலிய புதிய திருப்பணிகள் செய்ய வேண்டியிருப்பதால், அன்பர்கள் வேண்டுவன உதவி நிறைவேற்றி வைப்பார்களாக.

## 8. தினப்பூஜையும், விழாக்களும்.

இக்கோயிலில் தினந்தோறும் காலை, உச்சி, மாலை, இரவு ஆகிய நான்கு காலங்களிலும் அபிஷேக ஆராதனைகள் நடைபெறுகின்றன. அந்தந்தக்



காலங்களில் சென்று தரிசித்து வழிபட்டால் மிகவும் புண்ணிய முண்டு.

"காலைதொழ அற்றைவினைக் கட்டகலும் கட்டுச்சி
வேலை தொழ இப்பிறப்பில் வெந்துயர்போம்—[மாலையினில்
வந்து சிவன்றனை வந்திக்கில் ஏழ்பிறப்பின்
வெந்துயர மெல்லாம் விடும்"
(சிவதரிசன மகத்துவம்)

இக் கோயிலில் பெருவிழா நடைபெறுவதில்லை. மாத விழாக்கள் மட்டும் அவ்வப்போது நிகழ்ந்து வருகின்றன. தை மாதம் கடைசி வெள்ளிக்கிழமை நாளில் மூலஸ்தான அம்மனுக்குச் சந்தனக்காப்புச் செய்து உற்சவ அம்மன் வெளியிற் புறப்பட்டுக் காட்சி கொடுத்து வரும். புரட்டாசி மாதம் நவ ராத்திரி விழாவில், விஜய தசமியாகிய கடைசி நாளில் அம்மன் கோயிலுக்கெதிரிலுள்ள குளக்கரைக்குப் புறப்பட்டுச் சென்று அம்பு விட்டுத் திரும்பும். ஐப்பசியில் கந்தர் சஷ்டி உற்சவமும், கார்த்திகை மாதத்தில் தீப உற்சவமும், அன்னபிஷேகமும் நடைபெறும். மார்கழி மாதத்தில் திருப்பள்ளி யெழுச்சி திருவெம்பாவை பாராயணமும், திருவாதிரை நாளில் நடராஜர் புறப்பாடும் நிகழும். மாசி மாதத்தில் மகா சிவராத்திரி நாளில் இரவு நான்கு காலங்களிலும் விசேஷ பூஜைகளும் சுவாமி புறப்பாடும் நடைபெறும். இதற்கு மூலதனமாக நிலங்கள் உள்ளன. மாதந்தோறும் கார்த்திகை, பிரதோஷ நாட்களில் அபிஷேக ஆராதனைகள் நிகழும்.

மேலும் இவ்வூரில் பிரசித்தி பெற்று விளங்கும் துர்க்கையாகிய செல்லியம்மனுக்கு ஆண்டு தோறும் ஆடிப்பூர நாளில் ஊர் அன்பர்களால் தனிப்பட்ட முறையில் திருவிழா நடத்தப்படுகிறது.

## 9. வருமானமும் சொத்துக்களும்

இக்கோயிலுக்குக் கீழ்க்கண்ட கிராமங்களில் நன்செய், புன்செய் நிலங்கள் உள்ளன.

| | | ஏகர். | சென்ட். |
|---|---|---|---|
| சுந்தர நாயகிபுரம் | நன்செய் | 25 | 98 |
| | புன்செய் | 121 | 70 |
| தாமரைக்கோட்டை | புன்செய் | 1 | 45 |
| அதிராம்பட்டினம் | புன்செய் | 35 | 10 |
| புத்தங் கோட்டகம் (தேவதானம்) | நன்செய் | 7 | 66 |
| (நன்செயும், புன்செயும்) | | 191 | 89 |

தற்கால நிலைமைப்படி இவைகளின் குத்தகை மூலமாயும், மனை, கடைவாடகை, மீன் குத்தகை மூலமாயும் ஆண்டு தோறும் சுமார் பத்தாயிரம் ரூபாய் வருமானம் வரும். அரசியலார் மோகினித்தொகையாக 54 ரூபாய் தருகிறார்கள், மேலும் தவணை வைப்பில் (Fixed Deposit) முப்பத்தெட்டாயிரம் ரூபாய் போடப்பட்டுள்ளது. சுமார் ஆயிரம் ரூபாய் மதிப்புள்ள நகைகள் உள்ளன. 1952-ல் ஏற்பட்ட புயலுக்கு முன் கோயில் வருமானம் மிகுதியாயிருந்தது. புயலால் மரங்கள் சேதமாகவே வருமானம் குறையலாயிற்று. 1955-ல் உண்டான புயலாலும் மேலும் நஷ்டம் ஏற்பட்டது.



## 10. நிர்வாகம்

இக்கோயில் ஆதியில் தேவஸ்தானக் கமிட்டியாரின் மேற்பார்வையில் இருந்து வந்தது, பிறகு 29—4—49-ல் 2218 எண்படி திட்டம் (Scheme) ஏற்பட்டு அது முதல் சென்னை அற நிலையப் பாதுகாப்பின் (Hindu Religious and Charitable Endowments) நேர் நிர்வாகத்தில் இருந்து வருகிறது. மேற்படி பாதுகாப்பினரால் நியமிக்கப் பெற்ற நிர்வாக அதிகாரியும், அறங்காவலர்களும் கோயில் காரியங்களைக் கவனித்து வருகிறார்கள்.

## 11. கல்வெட்டுக்கள்

சுவாமி கோயிலின் விமான மண்டபத்துச் சுவர்களில் சில கல்வெட்டுக்கள் உள்ளன. திருப்பணி செய்தபோது கல்வெட்டுக் கற்களை மாற்றியமைத்திருப்பதால் வரிகள் தொடர்பின்றிக் காணப்படுகின்றன. இவற்றால் சில செய்திகள் தெரியவருகின்றன. சுவாமியின் பெயர், உடையார் என்றும், அம்மன் பெயர் நாச்சியார் என்றும், திரிபுவனச் சக்ரவர்த்தி ராஜராஜன் காலத்தில் கோயிலில் திருவிளக்கு எரிக்கவும், உடையாரையும், நாச்சியாரையும் எழுந்தருள்விக்கவும் நிலங்கள் வழங்கப் பெற்றதாகவும் செய்திகள் காணப்படுகின்றன. நாட்டுக்கு உகந்தல வளநாடு, செல்வா நாடு என்னும் பெயர்கள் உள்ளன. இச்செய்திகளால் இக்கோயிலின் மூர்த்திகள், பல ஆண்டுகளுக்கு முன்பிருந்தே வழிபாடு செய்யப்பெற்று வந்திருப்பதாகத் தெரியவருகிறது.

## 12. வரலாறுகள்

### 1. அதிவீரராம பாண்டியர்

தமிழ் நாட்டு மூவேந்தர்களில் அதிவீரராம பாண்டியர், மதுரைமா நகரத்தில் செங்கோல்

செலுத்தி ஆண்ட சந்திரகுல வமிசத்துப் பாண்டிய அரசர்களின் பரம்பரையைச் சேர்ந்தவர். இவரது தமயனார் வரதுங்கராம பாண்டியர் ஆவர். இவரது பெற்றோர்கள், நெடுங்காலம் பிள்ளைப் பேறின்றி ராமேஸ்வரம் சென்று ராமநாதரை வழிபட்டதன் காரணமாகப் பிறந்ததால் இருவருக்கும் இராமன் என்ற பெயரைச் சேர்த்து வழங்கி வந்ததாகக் கூறுவர். இவர் தென்காசியில் இருந்து அரசு புரிந்ததாகவும், "வெற்றி வேற்கை வீரராமன் கொற்கையாளி" என்றபடி கொற்கை நகரிலிருந்து அரசு செய்ததாகவும் சொல்வர். "வலனுயர்த்த அண்ணலம்சேல் வான்றொடு பொற்கோட்டிமய வரையிற்றீட்டி, அலர்தலைமா நிலம்புரக்கும் அதிவீர ராமன் இகலரசர் ஏறே" என்னும் நைடத வரிகளால் இவருடைய கீர்த்தி விளங்கும். இவர் சரஸ்வதியின் அருளால் வடமொழியிலும், தென்மொழியிலும் நன்கு தேர்ச்சியடைந்து, சிறந்த பாடல்களைப் பாடுவதில் வல்லவரானார். நளனது சரிதையைக் கூறும் வடமொழி நைஷத நூலைத் தமிழில் மொழி பெயர்த்தார். "நைடதம் புலவர்க்கு ஔடதம்" என்னும் பழமொழி அந்நூலைப் பற்றி வழங்குகிறது. இவர் இயற்றிய வேறு நூல்கள்:—கூர்ம புராணம், காசி காண்டம், திருக்கருவை அந்தாதிகள், வெற்றி வேற்கை முதலியன. எனவே இவர் புவியரசராய் இருந்ததுடன் கவியரசராயும் விளங்கி வந்தார். இவருடைய காலம் 16-ம் நூற்றாண்டு.

இவர் கடற்கரையிலுள்ள இந்த இடத்தையும் தனது ஆட்சியில் கொண்டு வந்து தன் பெயரால் அமைத்தார். அதிவீரராம பாண்டியரால் அமைக்கப் பெற்றதால் அதிவீரராமன் பட்டினம் என்று பெயராகி, அது தற்போது அதிராம்பட்டினம் என்றும், அதிரை என்றும் வழங்குகின்றன.



## 2. செல்லியம்மன்

யாவற்றையும் கடந்த சிற் சக்தி "ஒன்றா யரும்பிப் பலவாய் விரிந்திவ்வுலகெங்குமாய் நின்றாள்" என்னும் முதுமொழியின்படி, ஆதியில் ஒன்றாயிருந்து பிறகு பற்பல வடிவங்களைப் பெற்று விளங்கும் இச் சக்தி உலகத்தார்க்கு அருள் செய்ய வேண்டிப் பெண்ணின் வடிவங்கொண்டு நாமகள் – திருமகள் – ஜயமகள் என்னும் பெயர்களில் தோற்றமளிக்கும். இவர்கள் முறையே கல்வி, செல்வம், வெற்றிக்குரிய தெய்வங்கள் ஆவர். நவராத்திரி விழாவில் இம் மூன்று சக்திகளையே வழிபடுவர். உலகை ஆளும் மன்னர்களும், பிறரும் வாழ்க்கைப் போரில் வெற்றி யடைய வேண்டியும், தாம் எண்ணியவற்றை நிறை வேற்ற வேண்டியும், துர்க்கையாகிய காளியையே வழிபடுவார்கள். இத்தேவதை, உயிர்களுக்குப் பகையாய் அவ்வப்போது தோன்றும் அசுரர்களையும், அசுர குணங்களையும் அழித்து உயிர்களை நல்வழிப்படுத்தும். இந்திய மன்னர்களின் சமஸ்தானங்களில், அவர்கள் வழிபட்டு வரும் தேவியின் கோயில்கள் தற்காலத்திலும் இருந்து வருவதை அறியலாம்.

அவ்வாறே இவ்வூரிலும் துர்க்கையின் அமிசமாகிய செல்லியம்மன் கோயில், ஊருக்கு நடுநாயகமாய் வடபுறத்தில் உள்ளது. இது ஊருக்குக் காவல் தேவதையாகச் சொல்லப்படுகிறது. மிகவும் சக்தி வாய்ந்தது. இந்தத் தேவதையின் பெயராலேயே ஊருக்கும் **செல்லிமாநகர்** என வழங்குகிறது. இந் நகரை அமைத்த அதிவீரராம பாண்டியன் என்னும் அரசனே இத்தேவதையைப் பிரதிட்டை செய்து வழிபட்டு வந்ததாகவும், பிறகு ஊரார் வழி வழியாக வழிபட்டு வருவதாகவும் சொல்லப்படுகிறது. இதன் திருவிழா ஆடிமாதத்தில் தனிப்பட்ட முறையில் ஊராரால் நடத்தப்படுகிறது.

## 13. துதிப்பாடல்கள்

### விநாயகர்

1. மண்ணுலகத்தினில் பிறவி மாசற
எண்ணிய பொருளெலாம் எளிதில் முற்றுறக்
கண்ணுதல் உடையதோர் களிற்று மாமுகப்
பண்ணவன் மலரடி, பணிந்து போற்றுவாம்.

(கந்தபுராணம்)

### வன்னி விநாயகர்

2. வன்னிமரம் வைகும் வளமார் கணபதியைச்
சென்னியிசை வைப்பாம் சிறந்து. (ஆசிரியர்)

### முருகன்

3. பன்னிரு கரத்தாய் போற்றி
பசும்பொன் மா மயிலாய் போற்றி
முன்னிய கருணை ஆறு
முகப்பரம் பொருளே போற்றி
கன்னியர் இருவர் நீங்காக்
கருணைவா ரிதியே போற்றி
என்னிரு கண்ணே கண்ணுள்
இருக்குமா மணியே போற்றி

(திருச்செந்தூர்ப் புராணம்)

### நடராஜர் (ஆடவல்லார்)

4. குனித்த புருவமும் கொவ்வைச் செவ்வாயிற்
குமிழ் சிரிப்பும்
பனித்த சடையும் பவளம்போல் மேனியில்
பால் வெண்ணீறும்
இனித்த முடைய எடுத்த பொற்பாதமும்
காணப்பெற்றால்
மனித்தப் பிறவியும் வேண்டுவதே இந்த மாநிலத்தே.

(அப்பர் சுவாமிகள்)



### சிவபெருமான்

5. ஆலமுண்டவனே போற்றி ஆதரித்தருள்வாய் போற்றி
பாலலோசனனே போற்றி பகவதிப்பரனே போற்றி
கோலவெண் விடையா போற்றி கோதறு குணனே
[போற்றி
காலன்றன் காலா போற்றி கானமர் கழலாய் போற்றி.

6. மதகரி உரியாய் போற்றி மான்மழுவரதா போற்றி
மதனடர் விழியாய் போற்றி மலைமகள் கணவா
[போற்றி
மதுரிதமகிபா போற்றி மாதவர் வாழ்வே போற்றி
விதுமுடி சடையா போற்றி வேதனை ஒழிப்பாய் போற்றி
(திருவெறும்பியூர்ப் புராணம்)

### தேவியார்

7. தனந்தரும் கல்விதரும் ஒருநாளும் தளர்வறியா
மனந்தரும் தெய்வ வடிவுந்தரும் நெஞ்சில் வஞ்சமில்லா
இனந்தரும் நல்லன எல்லாம் தரும் அன்பர்
[என்பவர்க்கே
கனந்தரும் பூங்குழலாள் அபிராமி கடைக்கண்களே.
(அபிராமி அந்தாதி)

8. மூவர்க்கும் முதற்பொருளாய் முத்தொழிற்கும் வித்தாகி
நாவிற்கும் மனத்திற்கும் நாடரிய பேரறிவாய்த்
தேவர்க்கும் முனிவர்க்கும் சித்தர்க்கும் நாகர்க்கும்
யாவர்க்கும் தாயாகும் எழிற்பரையை வணங்குவாம்.
(பதிபசுபாச விளக்கம்)

### செல்லியம்மன்

9. ஓரெட்டிதழ் வட்டத்துள்ளாய சட்கோண மோங்குசக்தி
நேரிட்ட முக்கோண வட்டத்தினடுவில் நிறைநிமலி
கூரிட்ட சூலமும் சக்கரமும் கையிற்கொண்ட செல்வி
போரிட்ட தீமையைப் போக்குஞ் சராசரப் புரந்தரியே.

### தக்ஷிணாமூர்த்தி

10. மும்மலம் வேறுபட் டொழிய மொய்த்துயிர்
அம்மலர்த் தாள்நிழல் அடங்கும் உண்மையைக்
கைம்மலர்க் காட்சியின் கதுவ நல்கிய
செம்மலை யலதுளம் சிந்தியாதரோ.
(திருவானைக்கா புராணம்)

### நால்வர்

11\. பூழியர்கோன் வெப்பொழித்த புகலியர்கோன்
[கழல்போற்றி
ஆழிமிசைக்கல் மிதப்பில் அணைந்தபிரான்
[அடிபோற்றி
வாழிதிரு நாவலூர் வன்றொண்டர் பதம்போற்றி
ஊழிமலி திருவாத வூரர்திருத் தாள் போற்றி.

### சண்டேசுரர்

12\. மெய்ம்மையே திருமேனி வழிபடா நிற்க
வெகுண்டெழுந்த தாதைதாள் மழுவினா லெறிந்த
அம்மையான் அடிச்சண்டிப் பெருமானுக்கடியேன்.
(சுந்தரர்)

### கோளறு பதிகம் (நவக்கிரகங்கள்)

13\. வேயுறு தோளிபங்கன் விடமுண்ட கண்டன்
மிக நல்ல வீணை தடவி
மாசறு திங்கள் கங்கை முடிமே லணிந்தென்
உளமே புகுந்த அதனால்
ஞாயிறு திங்கள் செவ்வாய் புதன் வியாழன் வெள்ளி
சனிபாம் பிரண்டு முடனே
ஆசறு நல்லநல்ல அவை நல்லநல்ல
அடியா ரவர்க்கு மிகவே. (திருஞானசம்பந்தர்)

---

### வாழ்த்து

வாழ்க அந்தணர் வானவர் ஆ[illegible]னம்
வீழ்க தண்புனல் வேந்தனும் [illegible]ங்குக
ஆழ்க தீயதெல்லாம் அரன் [illegible]மே
சூழ்க வையகமுந் துயர் தீர்[illegible]

---

ஸ்ரீ அபயவரதேஸ்வரர் அடி மலர் போற்றி.
திருச்சிற்றம்பலம்.

58758